

வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

(சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 15.02.2022 | 02.கிறிஸ்தவம், வாழ வேண்டிய ஜீவியம்! |
|---|---|



கிறிஸ்துவல்லாத எந்த சுபாவத்தையும் உதறித்தள்ளுங்கள். மற்றவர்கள் அதை வைத்திருந்தால் அது அவர்களுக்கு இருக்கட்டும், உங்களுக்கு அது வேண்டாம்! நீங்கள் அவரை கிட்டிச்சேர வேண்டுமென்றே தேவன் நோக்கமாய் இருக்கிறார்! அதற்காக, யாரையும் குறைகூறவோ குற்றம் சாட்டவோ வேண்டாம்.... நீங்களோ உன்னத பாதைக்கு தீவிரம் கொள்ளுங்கள்! ‘‘கிறிஸ்து உங்களுக்கு வேண்டும்!’’ அது ஒன்றே உங்கள் நோக்கமும் இலக்காயும் இருக்கட்டும். உங்கள் உள்ளத்தில் அவரே தொடர்ந்து வாசம் செய்திட வேண்டும். ஆம், ‘‘கிறிஸ்து ஒருவரே’’ உங்களுக்கு சம்பூரண நிறைவைத் தந்திட முடியும்!

உங்கள் இருதயத்தை முற்றிலுமாய் பரிசுத்த ஆவியானவருக்கு அள்ளிக்கொடுத்து விடுங்கள்! உங்கள் சிலுவை எத்தனை பாரமாயிருந்தாலும், அதை மகிழ்வுடன் ஏற்று குருவைப் பின்பற்றுங்கள்! மற்றவர்களுக்கு அது எளிதாய் இருக்கட்டும்.... உங்களுக்கு அல்ல! தவறியே ஆயினும் பிறர்மீது சிலுவையை வைத்துவிடாதீர்கள்!! இவை அனைத்தும் நாம் வாழ வேண்டிய கிறிஸ்தவ ஜீவியம்!!

– ரத்னம்